Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples' Daily    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2023    தை 16    (30-01-1992)    வியாழக்கிழமை    ஓசை: 346

## மீன்பிடிப் படகுகளில் அகதிகள் மன்னார் வருவர்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள மன்னார் மாவட்டத்தின் 13,000 அகதிகளைக் கப்பலில் அழைத்துவர முடியாத காரணத்தினால் அவர்கள் மீன்பிடிப் படகுகள் மூலமே தமிழகத்திலிருந்து அழைத்துவரப் படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 10 ஆம் திகதி முதல் தினமும் பத்துத் தொடக்கம் இருபது படகுகள் அகதிகளை மன்னாருக்கு ஏற்றிவருமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 18 சிங்கள இராணுவம் பலி: பலர் காயம்

# கிழக்கில் தொடர்ந்து புலிகள் வீரசாதனை

## பேயாடிக்குளத்தில் முகமூடியணிந்த தலையாட்டி

(வவுனியா)

வவுனியா பேயாடிக்கூளாங்குளம் பிரதான வீதிப் பகுதியில் சந்தேகத்திற்கிடமானவர்களை கைது செய்யும் நோக்கத்திற்காக சிறிலங்கா இராணுவத்தினரால் முகமூடி அணிந்த தலையாட்டி ஒருவர் நிறுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வீதியால் வவுனியா நகருக்கான போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகளில் சந்தேகத்திற்குரியவர்களை அடையாளம் காட்டுவதற்காகவே இவர் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளாராம்.

உடல் முழுக்க கறுப்புத் துணியால் போர்த்தப்பட்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தில் ஐவரை இராணுவம் கடத்தியது

(வவுனியா)

வவுனியா சமயபுரம் பகுதியில் ஒரே குடும்பத்தில் ஐவரை சிறிலங்கா இராணுவம் கடத்திச் சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. இதே சமயம், கணேசபுரம் என்ற கிராமத்தில் பத்து தமிழ்ப் பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்கள் அயலில் உள்ள கிராம மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் இரவு வேளை சமயபுரம் பகுதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 10,000 தோட்ட தொழிலாளர் நுவரெ. வேலை நிறுத்தம்

(நுவரெலியா)

கொங்கோடிய தோட்டத்தில் கடமைபுரியும் கள உத்தியோகத்தரை மாற்றம் செய்யக் கோரியும், வேலையிலிரு

தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் நேற்று முன்தினம் முதல் குதித்துள்ளனர்.

கடந்த இருபத்து மூன்றாம் திகதி முதல் கொங்கோடியா

## உதவிக்கு வந்த படை விரட்டியடிப்பு

(திருமலை)

நேற்றுக்காலை 7·30 மணியளவில் திருக்கோணமலை · பொலநறுவை எல்லைக் கிராமமான சிங்கபுரத்தில் விடுதலைப் புலி வீரர்கள் நடத்திய துணிகரத் தாக்குதலில் 18 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பெருமளவு நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இந்த மோதலில் புலிகள் தரப்பில் சேதம் இல்லை.

பொலநறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தைக்கும், சிங்கபுரவிற்கும் இடையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிங்கள இராணுவத்தினரே புலிகளின் அதிரடிக்கு உள்ளாகினர். சுமார் 40 பேர் கொண்ட இராணுவ அணியை விடுதலைப்புலிகள் வழிமடக்கித் தாக்கினர். இத்தாக்குதல் சிங்கபுர முகாமிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் நடந்தது.

விடுதலைப் புலிகளின் இந்த துணிகர அதிரடியில் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பத்திற்கும் மேற்பட்டோர், படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு ஏனையவர்கள் தப்பி ஓடினர். இம்மோதலில் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டதையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றிய ஆயுதங்கள்

(திருமலை)

நேற்று பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தைக்கும் சிங்கபுரத்துக்கும் இடையே விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

★ ஏ.கே.எல்.எம் ஜி. - 01
★ ரி-56-1ரக துப்பாக்கி - 02
★ ரி-56-2 ரக துப்பாக்கி - 02
★ ரி-81 ரக துப்பாக்கி - 02
★ ஜி-3 ஏ-3ரக துப்பாக்கி- 06 (பட்மொடல் - 05, புஸ் பட் - 01)
★ ஏ.கே.எல்.எம்.ஜி றம் மகசீன் - 01

(4ஆம் பக்கம் பார்க்க)

## தந்திரிமலையில் அதிரடி; 3 படை பலி: ஆயுதங்கள் மீட்பு

## குப்பிளான்மீது ஷெல்வீச்சு; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்காஇராணுவ முகாமிலிருந்து குப்பிளான் பகுதியை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலினால் இருவர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை மூன்று மணி முதல் ஏழாலை, குப்பிளான், கட்டுவன் பகுதிகளை நோக்கியே இந்த எறிகணைத் தாக்குதல் தொடுக்கப்பட்டது இத் தாக்குதலின்போது படுகாயமடைந்த இரண்டு பொது மக்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## காரைநகரிலிருந்து எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குக் கரையோரப் பகுதிகளை நோக்கி நள்ளிரவுவேளை காரைநகர் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணி முதல் அதிகாலை நான்கு மணிவரை ஏவப்பட்ட இந்த எறிகணைகள் பொன்னாலை, திருவடிநிழல், சம்பில்துறை, மூளாய் ஆகிய பகுதிகளில்வீழ்ந்து வெடித்தன. தாக்குதல் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து மக்கள் பாதுகாப்பிடங்களில் ஒதுங்கிக் கொண்டமையால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க, ச)

## இராணுவ கெடுபிடியின் எதிரொலி

## வவுனியா பயணிகளின் தொகைகளில் வீழ்ச்சி

# ஒரே குடும்பத்தில் ஐவரை இராணுவம் கடத்தியது

(வவுனியா)

வவுனியா சமயபுரம் பகுதியில் ஒரே குடும்பத்தில் ஐவரை சிறிலங்கா இராணுவம் கடத்திச் சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. இதே சமயம், கணேசபுரம் என்ற கிராமத்தில் பத்து தமிழ்ப் பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்கள் அயலில் உள்ள கிராம மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் இரவு வேளை சமயபுரம் பகுதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சிங்கபுரவிற்கும் இடையில் ரோந்து நடவடிக்கையில் ஈடு பட்டிருந்த சிங்கள இராணுவத்தினரே புலிகளின் அதிரடிக்கு உள்ளாகினர். சுமார் 40 பேர் கொண்ட இராணுவ தாக்குதல் சிங்கபுர முகாமிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் நடந்தது.

விடுதலைப் புலிகளின் இந்த துணிகர அதிரடியில் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்ட காயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு ஏனையவர்கள் தப்பி ஓடினர். இம்மோதலில் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டதையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காரைநகரிலிருந்து எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குக் கரையோரப் பகுதிகளை நோக்கி நள்ளிரவுவேளை காரைநகர் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன் தினம் இரவு ஒன்பது மணி முதல் அதிகாலை நான்கு மணிவரை ஏவப்பட்ட இந்த எறிகணைகள் பொன்னாலை, திருவடிநிழல், சம்பில் துறை, மூளாய் ஆகிய பகுதிகளில்வீழ்ந்து வெடித்தன. தாக்குதல் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து மக்கள் பாதுகாப்பிடங்களில் ஒதுங்கிக் கொண்டமையால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க, ச)

# கைப்பற்றிய ஆயுதங்கள்

(திருமலை)

நேற்றுபொலநறுவைமாவட்டம் வெலிக்கந்தைக்கும் சிங்கபுரத்துக்கும் இடையே விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

★ ஏ.கே.எல்.எம் ஜி. - 01
★ ரி-56-1ரக துப்பாக்கி - 02
★ ரி-56-2 ரக துப்பாக்கி - 02
★ ரி-81 ரக துப்பாக்கி - 02
★ ஜி-3 ஏ-3ரக துப்பாக்கி- 06 (பட்மொடல் - 05, புஸ் பட் -01)
★ ஏ.கே.எல்.எம்.ஜி றம் மகசீன் - 01

(4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ கெடுபிடியின் எதிரொலி

# வவுனியா பயணிகளின் தொகைகளில் வீழ்ச்சி

[வவுனியா]

வவுனியா - யாழ். பிரதான வீதியில் பேயாடி கூழாங்குளம் சிறிலங்கா இராணுவத்தின் சோதனை முகாம் வழியாக வவுனியா நகருக்கும் தென் இலங்கைக்குமான போக்குவரத்தை மேற்கொள்ளும் தமிழ்ப் பிரயாணிகளின் தொகை மிகக் குறைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கான பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளைத் தவிர கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பிரயாணிகள் மேற்படி பாதை ஊடாக போக்குவரத்தை மேற்கொள்வது மிகக் குறைந்துள்ளது.

இம்மாவட்டங்களைச் சேர்ந்த அரச, தனியார் துறை ஊழியர்கள் மட்டுமே அதிகளவில் பயணம் மேற்கொள்கின்றனர்.

சமீப நாட்களாக வியாபாரிகள், மற்றும் பொதுமக்கள் மீதான கெடுபிடிகளையும், விசாரணைகளையும் இராணுவத்தினர் அதிகப்படுத்தியதைத் தொடர்ந்தே பிரயாணிகளின் தொகை குறைந்து விட்டதாகக் கூறப்படுகின்றது. தி

# 10,000 தோட்ட தொழிலாளர் நுவரெ. வேலை நிறுத்தம்

(நுவரெலியா)

கொங்கோடிய தோட்டத்தில் கடமைபுரியும் கள உத்தியோகத்தரை மாற்றம் செய்யக் கோரியும், வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலை வழங்குமாறு கோரியும், நுவரெலியா பகுதியில் சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் நேற்று முன்தினம் முதல் குதித்துள்ளனர்.

கடந்த இருபத்து மூன்றாம் திகதி முதல் கொங்கோடியா தோட்டத்தில் நடைபெறும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக இது ஒரு அடையாள வேலை நிறுத்தமே எனவும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

# தந்திரிமலையில் அதிரடி; 3 படை பலி; ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

தந்திரிமலைக் காட்டுப்பகுதி இராணுவமுகாமைத் துப்புரவு செய்ய முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மின்னல் வேக அதிரடித் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், சில ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 7 மணியளவில் வவுனியா மாவட்டத்தில் உள்ள தந்திரிமலை அடிப் பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்து துப்புரவு செய்ய வெளியே வந்த இராணுவத்தினர்மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மூன்றுநிமிடங்கள்மட்டுமே நடைபெற்ற இத்தாக்குதலின்போது மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின் போது புலிகள் தரப்பில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஆரியரெட்னாவின் ஊழல்; யாழ்நகரில் துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

ஆரியரெட்னாவின் தலைமையில் இயங்கும் சர்வோதய அமைப்பு இனவாத நோக்கில் செயற்பட்டுவருவதாகக் கூறும் துண்டுப் பிரசுரமொன்று நேற்றுப் பல இடங்களிலும் விநியோகிக்கப்பட்டிருந்தது. வடகிழக்கு நலன்பேணும் மக்களால் வெளியிடப்பட்ட இத் துண்டுப் பிரசுரத்தில் ஆரியரெட்னாவின் ஊழல் குகைகளாக விளங்கும் சர்வோதயக் கிளைகளை மூடும்படியும், பணியாற்றும் ஊழியர்களைப் பதவி விலகும்படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் சீன டாங்கிகள்

# பெரும் படையெடுப்பிற்கு முஸ்தீபு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பாரிய இராணுவ தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கான தயாரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. சீனத் தயாரிப்பு டாங்கிகள், கவச வாகனங்கள் உட்பட பெருந்தொகையில் இராணுவத் தளபாடங்களும், பெருமளவிலான துருப்புக்களும் குவிக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 60 டாங்கிகள், கவச வாகனங்கள் இரவோடு இரவாக அநுராதபுரத்திலிருந்து ஈரப்பெரிய குளம் இராணுவ முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன அத்துடன்ஆயிரக் கணக்கான துருப்புகள் வவுனியாவிலுள் பல முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதேசமயம், வவுனியாவின் சில பகுதிகளில் விமானக் குண்டுவீச்சுக்களும் தீவிரமாகி வருகின்றன.

# சமஷ்டி அமைப்பே சிறிலங்காவிற்கு ஏற்றது

## - பேராசிரியர் ஜெயதேவா லியனகொட

(அவிசாவெலை)

பிரதேச சபையிலிருந்து ஜனாதிபதிவரை அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட ஒரு சமஷ்டி ஆட்சி அமைப்புத்தான் சிறிலங்காவுக்குத் தேவையானது என்று சீத்தாவாகபுர சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கில் பேசும் போது பேராசிரியர் ஜெயதேவா லியனகொட தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், மனித உரிமைகள் மீறுதல் இன்று அரசியல் நாகரிகமாகிவிட்டது. கொடூரமான நிர்வாகத்தின்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய - சிறிலங்கா கடற்படை தளபதி. சந்திப்பு

(டில்லி)

சிறிலங்கா கடற்படை தளபதி வால்டர் பெர்னான்டோவும் இந்திய கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ராம்தாசும் நேற்று டில்லியில்சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடாத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா கடற்படை தளபதி ஐந்து நாள் விஜயமொ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மாபெரும் நினைவு விழா

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து பல்வேறு சம்பவங்களில் அதன் வெற்றிக்கு உழைத்து தை மாதத்தில் வீரச்சாவை தழுவிக் கொண்ட வடமராட்சியைச் சேர்ந்த பதினைந்து மாவீரர்களை நினைவு கொள்ளும் மாபெரும் நினைவுவிழா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர் மீது கலிபர் தாக்கு

நேற்றுக்காலை, பூநகரிப் பகுதியிலுள்ள கல்முனையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தடைமுகாமில் இளைஞர் மீது கடும் தாக்குதல்

வவுனியாதடைமுகாம்பகுதியில் இருக்கும் சமூக விரோதக் கும்பல்கள் இரண்டு அப்பாவி இளைஞர்கள் மீது கடும் தாக்குதலை நடாத்தியுள்ளனர். கடந்த 27 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது. இறக்கும் தறுவாயில் இருந்த இந்த இரு இளைஞர்களும் பொது மக்களால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

# உள்நாட்டுப் போரைதீர்க்கும் உறுதி எவரிடமுமில்லை

## கனேடிய மனித உரிமைகள் குழு கவலை

[கொழும்பு]

இலங்கையில் உள்நாட்டுப் போரினைத் தீர்த்து வைக்கும் அரசியல் உறுதி எவரிடமும் காணப்படாதது கவலைக்குரியதென்று இலங்கையில் எட்டு நாள் விஜயத்தை முடிவு செய்து கொண்டுள்ள கனேடிய மனித உரிமைகள் தூதுக் குழு கவலை தெரிவித்தது.

அரசாங்க தரப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தமது தூதுக்குழுவினால் ஏற்றுக் கொள்ள முடியாதாக இருப்பதாக தூதுக் குழு பத்திரிகையாளரிடம் குறிப்பிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மனித உரிமைகள் சட்டவல்லுனர்கள் சமயத் தலைவர்கள் அடங்கிய ஒன்பது பேர் அடங்கிய கனேடிய மனித உரிமைகள் தூதுக்குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகள் விவகாரம்

# இந்தியா சிறிலங்காமீது ஐ. நா. நிறுவனம் அதிருப்தி

(கொழும்பு)

தமிழகத்தில் தங்கி இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் இலங்கை இந்திய அரசுகளின் நடவடிக்கைகளால் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயம் பெரும் அதிருப்தி அடைந்திருக்கிறது.

தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கைத்தமிழ் அகதிகளைப் பார்வையிடுவதற்கு இலங்கை இந்திய அரசுகள் அனுமதி வழங்காமையினால் உருவாகிப இவ் அதிருப்தி காரணமாக மேற்படி அகதிகளைப் பொறுப்பேற்கவும் பராமரிக்கவும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் மறுப்புத் தெரிவித்திருக்கிறது. தமிழகத்தில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகள் நாடு திரும்புவதற்கு விரும்புகி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சீனாவைப் போல நடக்க இந்தியாவிடம் கோரிக்கை

(பீகிங்)

சீனாவின் முன்மாதிரியைப் பின்பற்றி இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறு இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் டேவிற்லெவி இந்தியாவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

சீனாவுக்கான தனது ஐந்து நாள் விஜயத்தை முடித்துக் கொண்ட வேளையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் இந்திய அரசாங்கம் இழந்து போன தனது நேரத்தை ஈடுசெய்ய வேண்டிய நேரம் வந்து விட்டதாகக் குறிப்பிட்டார். அத்துடன் இஸ்ரேலுடன் பூரணமான இராஜ தந்திர உறவுகளை ஏற்படுத்தி உண்மையில் சோவியத் யூனியன் செய்ததைப் போல, சீனா நடந்து கொண்டதைப் போல இந்தியாவும் நடந்து கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.


புதிய உயர் கல்லூரி

NEW COLLEGE OF HIGH STUDIES

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

Spoken English With GRAMMAR By BRITTO

புதிய பிரிவு ஆரம்பம் 1.2.1992 காலை 11 மணி

(சி-3860)


## வரி விளம்பரம்


### பழைய அரசியற் புத்தகங்கள்

இயக்கங்களின் கூட்டணியினரின் மற்றும் ஈழத்து அரசியற் புத்தகங்கள். பத்திரிகைகள் தற்போதைய பெறுமதியில் பெற்றுக் கொள்ளப்படும். யாழ். பழைய புத்தகக்கடை, 82 அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி. (2159)

### A,L இரசாயனம்

A/L 93 இரசாயனம் (Basic) ஆரம்பம்: 1-2-92 சனி ஞாயிறு 6-30 a.m ஆசிரியர் சததீஸ், 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (2157)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணின் மைந்தனாய் 09-05-1974

மாவீரனாய் 30-01 1991

பரமவங்கை கலீபன்
(கந்தசாமி யோகதாசன்)

உயிரிலும் மேலாகத் தமிழ் ஈழத்தை
உத்தமனே நேசித்தாய் உயிரை ஈந்தாய்
உன் பெருமை உலகுள்ளகாலம் வரை வாழும்
நீ என்றும் வாழ்ந்திடுவாய் எம் இதயந்தன்னில்!

மியான்மா அகதிகளுக்கென

# சர்வதேச சமூக உதவியை பங்களாதேஷ் கோருகிறது

(ரங்கூன்)

மியான்மா இராணுவத்தின் சித்திரவதைகளுக்கும், கொடுமைகளுக்கும் தப்பி எல்லையைக் கடந்து பங்களாதேஷ் வந்துள்ள 65,000 முஸ்லிம் அகதிகளுக்கு உதவுமாறு பங்களாதேஷ் அரசாங்கம் சர்வதேச சமூகத்தைக் கோரியுள்ளது.

இதுபற்றி பங்களாதேச அதிகாரிகள் மேலும் கூறுகையில் அகதிகளுக்கு உதவுவதற்கு எங்களிடம் போதியளவு உணவுப் பொருள்கள் இல்லை. பர்மா முஸ்லிம் அகதிகள் வருவது அதிகரித்து வருவதைத் தொடர்ந்து கையிருப்பிலுள்ள உணவு தீர்ந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

இதேவேளை மியான்மா (பர்மா)வில் சுதந்திரம் கோரி நொகிஹிங்கயா கிளர்ச்சிக்காரர்கள் நடத்திவரும் போராட்டத்திற்குபங்களாதேசம் அவர்களின் தளமாக இருக்கிறது என்றும் அகதிகள் அவர்களுக்கு உதவுகிறார்கள் என்றும் மியான்மா இராணுவ அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

# தமிழகத்தில் பொலிஸ்சூடு; 15 பேர் காயமடைந்தனர்

(சென்னை)

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள கிராமம் ஒன்றில் தமிழக காவல்துறையினரின் துப்பாக்கி பிரயோகத்திற்கு மூவர் காயம் அடைந்தனர். காவல் துறையினால் கைது செய்யப்பட்ட ஒருவரின் ஆதரவாளர்களும், உறவினர்களும் தனியார் பேருந்து மீது வெடிகுண்டை வீசினர் எனவும் பின்னர் போக்குவரத்து கழக பேருந்து ஒன்றை தீயிட்டனர் என்றும் தமிழக காவல்துறையினர் தெரிவித்தனர். பின்னர் இவர்கள் காவல்துறை குழு ஒன்றை தாக்கியதால் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டி ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மொத்தமாக ஒரு காவல்துறை அதிகாரி உட்பட 15 பேர் காயம் அடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# அமெரி., ரஷ்ய தலைவர்கள் காம்ப்டேவிட்டில் சந்திப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினை காம்ப்டேவிட்டில் வரும் சனிக்கிழமை சந்தித்து பேசுவார் என வெள்ளைமாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நியூயோர்க்கில் நடைபெறும் ஐ நா. பாதுகாப்புச் சபைத் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட மறுதினம் இரு தலைவர்களும் மீண்டும் சந்திப்பார்கள் என்றும்,

இதன் பின்னர் இருவரும் கூட்டாக பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிப்பார்கள் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

மனித உரிமைகள் குறித்து

# சீனப் பிரதமர் லீபெங்குடன் ஜோர்ஜ்புஷ் பேசுவார்

(வாஷிங்டன்)

சீனாவில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றி சீனப் பிரதமர் லீபெங்குடன் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் பேச்சுக்கள் நடாத்தும்போது பிரஸ்தாபிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுவிட்சலாந்தின் தலைநகரான சூரிச்சில் நடைபெறும் உலக பொருளாதாரமாநாட்டில்கலந்து கொள்வதற்காக சென்றிருக்கும் சீனப் பிரதமர் லீபெங் முன்னதாக ரோம் நகருக்கும் சென்றிருந்தார், சூரிச் நகரில் அமெரிக்க அதிபர் புஷ், சீனப்பிரதமருடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளார். அதன்பின்னர் சீனப் பிரதமர் லீபெங் பேர்ளினில் நடைபெறும் அரசாங்க வரவேற்பு ஒன்றில் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார்.

# புகையிரத ஊழியர்களுக்கு

# எம். ஜி. ஆரின் படங்களை ஜெயலலிதா புறக்கணிப்பு

(சென்னை)

தமிழகத்து முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அ. தி. மு. க. வின் முன்னாள் முதலமைச்சராக இருந்த எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களின் பெயரில் வெளியாகும் படங்களை இருட்டடிப்புச் செய்து வருவதாக தமிழகத்துச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த எம். ஜி. இராமச்சந்திரன் இருந்த போது தன்னுடைய எந்தக் கட்சிக் கூட்டங்களுக்கோ அல்லது வேறு வைபவங்களுக்கோ செல்லும் போதெல்லாம் தமது கட்சியை வளர்த்தெடுத்த தலைவரை நினைக்கத் தவறுவதில்லை. அரசு விளம்பரங்களிலோ அண்ணா உருவம் கண்டிப்பாக பொறிக்கப்பட்டிருக்கும். ஆனால் இப்போது வெளிவருகிற அரசு விளம்பரங்களில் அண்ணா படமும் இருக்காது எம். ஜி. ஆர் படமும் இருக்காது.

தற்போதைய முதல்வர் செல்வி ஜெயலலிதா அ. தி. மு. க வில் தன்னை வளர்த்தெடுத்த தலைவரை நினைக்க மறந்து வருகிறார். தனது கட்சிக்காரர்கூட எம். ஜி. ஆரை நினைவில் வைதது பத்திரிகையில் அட்டைப்படம் போடக்கூடப் பயப்படுகிறார்கள். காரணம் செல்வி ஜெயலலிதாவின் கோபத்திற்கு இலக்காகி விடுவோமோ என்று.

அ. தி. மு.க.தோன்றிய பின்னர் சந்தித்த முதல் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் எம். எல். ஏ அரங்கநாயகம் (எம் ஜி. ஆரினாலேயே இருமுறை அமைச்சராக்கப்பட்டவர்) அவர்களின் புதல்வரின் திருமணம் அண்மையில் நடந்தது. திருமணப் பத்திரிகையில் முன்பக்கம் ஜெயலலிதா படம். பின் பக்கமும் ஜெயலலிதா படம். ஸ்டாம்ஸ் சைஸ் அளவில் கூட எம். ஜி. ஆர் படம் இல்லை.

எம்.ஜி.ஆர்படத்தைப்போட அரங்கநாயகம் போன்றவர்களே பயப்படுகிறார்கள் என்று அர்த்தம்! ஒரு திருமண அழைப்பிதழிலேயே இப்படி என்றால் அரசாங்க விளம்பரங்களில் எப்படி எம். ஜி ஆர் படம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அ. தி. மு. க அமைச்சர் திருச்சி சௌந்தரராஜனின் மகள் திருமணம் கூட கட்டினார்கள்! கடைசியில் ஜெயலலிதா வரவில்லை.

அழைப்பிதழில் எம். ஜி ஆர் படம் போடாத அரங்கநாயகத்தின் புதல்வர் திருமணத்துக்குப்போன முதல்வர் இவர் வீட்டுக்கு வராததற்கு இப்படி பேச்சு இருப்பது உண்மை!

# ஆசியான் கூட்டமைப்பில் இந்தியா உறவு விருத்தி

(சிங்கப்பூர்)

தென் கிழக்கு ஆசிய நாடுகள் சங்கம் - ஆசியானில் தொழில் முதலீடு மற்றும் சுற்றுலாத் துறைகளில் இந்தியாவும் ஒரு பிராந்திய நாடாக நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆசியான் அமைப்பின் இரண்டு நாள் உச்சிமாநாட்டின் முடிவில் சிங்கப்பூர் பிரதம மந்திரி இதை அறிவித்தார்.

பலதரப்பு ஒத்துழைப்பை விரிவாக்கும் வகையில் சர்வதேச நிறுவனங்கள், ஆர்வமுடைய நாடுகளுடன் இந்தியா ஆலோசனை அடிப்படையிலான உறவுகளை வைத்துக் கொள்ளும் என்று ஆசிய நாடுகளின் தலைவர்கள் கையெழுத்திட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

# சுதந்திரக் கட்சிக்குள் நான்கு குழுக்கள்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நான்கு குழுக்கள் இயங்குவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறிமா தலைமையில் ஒரு குழு, அநுரா பண்டாரநாயக்க தலைமையில், திலக் கருணாரத்தினா தலைமையில், சுயேச்சையாக ஒரு குழுவும் ஆக நான்கு குழுக்கள் கட்சிக்குள் இருக்கின்றன என்றும்,

பல்வேறு எம். பிக்கள் கட்சிக்குள் தமக்கென ஒரு குழுவை அமைக்க விரும்புவதாலேயே இத்தகைய குழப்பம் ஏற்படுகிறது என்றும் கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

## நினைவு கூருகின்றோம்...

1992-01-30



உஷாந்தன்



மண்ணின் மைந்தனாய்

09-05-1974

மாவீரனாய்

30-01 1991

**வீரவேங்கை கலீபன்**

(கந்தசாமி யோகதாசன்)

உயிரிலும் மேலாகத் தமிழ் ஈழத்தை
உத்தமனே நேசித்தாய் உயிரை ஈந்தாய்
உன் பெருமை உலகுள்ளகாலம் வரை வாழும்
நீ என்றும் வாழ்ந்திடுவாய் எம் இதயந்தன்னில்!

வெள்ளாம்போக்கட்டி — தாய், சகோதரன்,
கொடிகாமம். — சித்தப்பா, அன்ரி, மாமன் மாமிமார்,
(2149) — மற்றும் உறவினர் நண்பர்கள்.

# 6-ம் மாத நினைவஞ்சலி



**2-ம் லெப். றெனோ**

**(ஜெ. மதியழகன்)**

வீர உதயம் 28-05-1974 — வீர உதிர்வு 30-07-1991

ஆதிக்க வெறிதனை அழிக்க ஆனையிறவு சென்ற வீரபுலியே! உன் தாய் நாட்டின் விடுதலைக்காய் உன் உயிரை ஈந்த தமிழ் மறவனே! நீ மாவீரனாகி விட்டாயடா. சித்தப்பாவின் பெயர் கொண்டு அமைக்கப்படும் சிறப்புப்படைப்பிரிவாம் ''சாள்ஸ் அன்ரனியில்'' நீ உன்னையும் இணைத்து ஆதிக்க வெறியரின் கொட்டந்தனைத்தீர்த்தாயடா.

உன்னை இழந்து ஓராறு மாதங்கள் ஆனாலும் உன் நினைவுகள் எம் கண்களைக் குளமாக்கியவண்ணமே உள்ளடா. ஒரு கணம் உனது பிரிவுக்காக சிந்திய எமது கண்ணீர் உனது இலட்சியத்தின் பாதையிலே செல்வதற்காய் செந்நீராய் மாறுமடா.

★ 30-07-91 அன்று இவரோடு வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து வீரவேங்கைகளுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றோம்.

கைதடி, — குடும்பத்தினர்.
நுணாவில்,
தமிழீழம். — [சி,3854]

காரிகள் தெரிவித்துள்ளனர்.

நியூயோர்க்கில் நடை ... ஞர்குப் பேட்டியளிப்பார்கள் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

### மனித உரிமைகள் குறித்து

## சீனப் பிரதமர் லீபெங்குடன் ஜோர்ஜ்புஷ் பேசுவார்

(வாஷிங்டன்)

சீனாவில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றி சீனப் பிரதமர் லீபெங்குடன், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் பேச்சுக்கள் நடாத்தும் போது பிரஸ்தாபிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுவிட்சலாந்தின் தலைநகரான சூரிச்சில் நடைபெறும் உலக பொருளாதாரமாநாட்டில்கலந்து கொள்வதற்காக சென்றிருக்கும் சீனப் பிரதமர் லீபெங் முன்னதாக ரோம் நகருக்கும் சென்றிருந்தார், சூரிச் நகரில் அமெரிக்க அதிபர் புஷ், சீனப்பிரதமருடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளார். அதன்பின்னர் சீனப் பிரதமர் லீபெங் பேர்ளினில் நடைபெறும் அரசாங்க வரவேற்பு ஒன்றில் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார்.

## புகையிரத ஊழியர்களுக்கு கட்டாய இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து புளியங்குளம் வரை உள்ள புகையிரத நிலையங்களில் கடமையாற்றும் புகையிரத நிலைய ஊழியர்கள் அனைவரும் தென்மாகாணத்திற்கும், கிழக்கு மாகாணத்திற்கும் இடமாற்றப்பட்டுள்ளார்கள்.

இந்த மாற்றங்கள் கட்டாயமாக நடைமுறைப் படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றம் பெற்றுப் புதிய இடங்களுக்குச் செல்பவர்களுக்கு பிரயாணச் செலவு வழங்கப்படமாட்டாது என்றும் மாற்றக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அரபுப் பிரதேசத்திலிருந்து

## குடியேற்றத்திட்டங்கள் நிறுத்தப்படமாட்டாது

### — சமீர் அறிவிப்பு

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் யூதர்களைக் குடியேற்றும்தனது திட்டத்தை இஸ்ரேல் நிறுத்திக் கொள்ளாது என இஸ்ரேலியப் பிரதமர் யீட்சாக் சமீர் அறிவித்துள்ளார். யூதப் பத்திரிகையாளர்களின் மாநாடு ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில் குடியேற்றத் திட்டங்களை நிறுத்திக் கொள்வது பற்றி இஸ்ரேலும், இஸ்ரேலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களும் ஒன்றும் பேசவில்லையென்று குறிப்பிட்டார்.

எமது நாட்டின் சகல பகுதிகளையும் அபிவிருத்தி செய்வது எமது நிலைப்பாடாகும். இது எமது கொள்கையாகும்.

சிரியாவிடமிருந்து கைப்பற்றப்பட்ட கோலான்மலைப்பகுதி ஜோர்தானிடமிருந்து கைப்பற்றப்பட்ட மேற்குக் கரைப் பகுதி எகிப்திடமிருந்து கைப்பற்றப்பட்ட காசாப்பகுதி அனைத்தையும் உள்ளடக்கியதே இஸ்ரேல் எனத்தெளிவுபடுத்திய சமீர், இப்பகுதிகளில் வருங்காலத்தில் அநேக யூதர்கள் குடியமர்த்தப்படுவார்கள் என்றும் கூறினார்.

இதேவேளை யூதர்களின் அவசர குடியேற்றத்திற்காக அமெரிக்காவிடமிருந்து இஸ்ரேல் நிதிஉதவி கோரியுள்ளமையும் அமெரிக்கா இந் நிதியுதவியை வழங்கத் தயக்கம் காட்டுவதும் தெரிந்ததே.

## ஹெலிக்கப்டர்விபத்தில் நாற்பது பேர் உயிரிழப்பு

(மாஸ்கோ)

அசர்பைசான் குடியரசில் சர்ச்சைக்குரிய பிரதேசம் ஒன்றில் பறந்த ஹெலிக்கப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதில் நாற்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்களும், குழந்தைகளும் கூட அடங்குவர் என்று டாஸ் செய்தி தாபனம் தெரிவித்தது.

ஆர்மேனிய இராணுவத்தினராலேயே இக் ஹெலிக்கப்டர் சுட்டுவீழ்த்தப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

முதல் எம். எல். ஏ அரங்கநாயகம் (எம் ஜி. ஆரினாலேயே இருமுறை அமைச்சராக்கப்பட்டவர்) அவர்களின் புதல்வரின் திருமணம் அண்மையில் நடந்தது. திருமணப் பத்திரிகையில் முன்பக்கம் ஜெயலலிதா படம். பின் பக்கமும் ஜெயலலிதா படம். ஸ்டாம்ஸ் சைஸ் அளவில் கூட எம். ஜி. ஆர் படம் இல்லை.

எம்.ஜி.ஆர்படத்தைப்போட அரங்கநாயகம் போன்றவர்களே பயப்படுகிறார்கள் என்று அர்த்தம்! ஒரு திருமண அழைப்பிதழிலேயே இப்படி என்றால் அரசாங்க விளம்பரங்களில் எப்படி எம். ஜி ஆர் படம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அ. தி. மு. க அமைச்சர் திருச்சி சௌந்தரராஜனின் மகள் திருமணம் நடந்தது. இவர் மூன்று நாள் முயற்சி செய்து முதல்வரைச் சந்தித்தார்! திருமணத்தை நடத்தித்தர வேண்டிக் கொண்டார். முதல்வரும் சம்மதித்தார். அழைப்பிதழில் முதல்வர் படத்துடன் எம். ஜி ஆர் படத்தையும் போட்டுவிட்டார் இவர். ஜெயலலிதா திருமணத்துக்கு வரமாட்டார் என அப்போதே சிலர் அவரை பயமுறுத்தினர் பந்த

### வவு.மாவட்டத்தில் கலை நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கலைஞர்களினால் வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளில் கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட உள்ளன.

வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் எதிர்வரும் எட்டாம் திகதி புளியங்குளம் மகாவித்தியாலயத்திலும், ஒன்பதாம் திகதி கனகராயன்குளம் பாடசாலையிலும் இக்கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

உயிர்த்தமனிதர்கள் [கூத்து] சந்தனக்காடு (நாடகம்) ஆகிய இரு நிகழ்ச்சிகளே நடாத்தப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## ஜனசக்தி 3ஆம் கட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

ஜனசக்தி திட்டத்தின் மூன்றாம் கட்டம் அடுத்த மாதம் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த என வடக்கு-கிழக்கு மாகாணங்கள் உட்பட 31 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ... கூருகின்றோம்...

**1992-01-30**



**உஷாந்தன்**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் தேடுதலுக்காகப் புறப்பட்ட இராணுவத்தினரை வட்டக்கச்சி தர்மபுரம் வீதியில் முற்றுகையிட்டிருந்தபோது வீரச்சாவெய்திய

**லெப். சம்பந்தன்** [செல்லப்பா ஞானசுந்தரம் - திருக்கோணமலை]

**சுகு** [குமாரையா ரமேஷ்-தண்ணீரூற்று, முள்ளியவளை]

தொண்டமானாறில் சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரச்சாவெய்திய

**கப்டன் சுருளி** [பாலசிங்கம் மனோகரன் - உவர் மலை, திருக்கோணமலை]

1987 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொக்கட்டிச்சோலை முற்றுகையின் போது படுகொலை செய்யப்பட்ட பொது மக்கள்

1989 ஆம் ஆண்டு அளவெட்டியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டு பின்னர் ஆறுகால்மடம் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரி ஊழியரான இளைஞன்.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் வீரச்சாவெய்திய

**அஜித்** [பசுபதி அரிகரன்-இடதுகரை, முத்தையன்கட்டு

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**உஷாந்தன்** [செல்லையா உதயகுமார் - மணல்பகுதி, புத்தூர்]

**கிருபா** [சோமசுந்தரம் காண்டீபன் - கைதடி]

**வினோத்** [மாணிக்கராசா முரளி - நாகர் கோவில்]

**கலீபன்** [கந்தசாமி யோகநாதன் - வெள்ளாம் போக்கட்டி கொடிகாமம்]

குறிஞ்சாமுனையில் சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**மயூரன்** [நாவற்குடா, மட்டக்களப்பு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/3865)

## சிந்தனைக்கு

ஒரு நாட்டின் குடிமக்கள், நாட்டின் சார்பில் செய்யும் தியாகத்தின் மொத்த தொகுதியின் முழுமையே நாடு.

- மகாத்மா காந்தி


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 30-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


# எழுச்சியைவெளிப்படுத்தும் வெகுசனப் போராட்டங்கள்

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கண்மூடித்தனமான இராணுவ நடவடிக்கைகள் பாடசாலை மீதான விமானத் தாக்குதல்கள், பொருளாதாரத் தடைகள், அழுத்தங்கள், நிவாரணஉதவிகளை ஒழுங்காக வழங்காமை போன்ற பிரச்சினைகளை முன் வைத்து குடாநாடு பூராவும் மாபெரும் ஆர்ப்பாட்ட, மறியல் போராட்டங்களை நடத்துவதற்கு குடாநாட்டிலுள்ள 2000க்கு மேற்பட்ட பொதுஸ்தாபனங்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் குழு முடிவு செய்துள்ளது.

அரசிற்கெதிராக நடத்தப்படும் இப்போராட்டம் வரவேற்கத்தக்கது. உண்மைகளை, மக்களின் அவலங்களை வெளிக் கொண்டுவரவல்லது. விடுதலை கோரி ஆயுதப்போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருப்பினும் மக்கள் போராட்டம் அவசியமானதாகும். மக்கள் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொள்வதனாலேயே போராட்டம் முன்னேறிச் செல்வதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

உலகில் தேசிய இனங்களின் ஆயுதப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பல்வேறு பகுதியிலும் மக்கள் பெருமளவில் நேரடியாகப் போராட்டத்தில் பங்கு கொண்டே வருகின்றார்கள். அது போராட்டத்திற்கு எழுச்சியைக் கொடுப்பதாகும். இதேவேளை ஒப்பீட்டளவில் தமிழ்மக்கள் நேரடியாகப் போராட்டத்தில் பங்கு கொள்வது குறைவு என்றே சொல்லுதல் வேண்டும்.

இந்தியக் குடியரசு தினமான இம்மாதம் 26ஆம் திகதி காஷ்மீரில் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருந்தது. கன்னியா குமரியில் இருந்து காரில் ஒற்றுமை யாத்திரை சென்ற பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் முரளி மனோகர் ஜோசி காஷ்மீருக்கு மட்டும் ஹெலிகொப்டரில் சென்று இந்திய தேசியக் கொடியை சிறிநகரில் ஏற்றினார். இதற்கு காஷ்மீரில் மக்களின் வலுவான எதிர்ப்பு இருந்தபோதிலும், ஊரடங்கு உததரவால் வெளியில் வந்து மக்களால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடமுடியவில்லை. ஆனால், அடுத்த நாள் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வ...

# இலங்கையின் ஐக்கியத்திற்கென சிங்களவர் எதையும் செய்யவில்லை

இலங்கையின் ஐக்கியத்தை பாதுகாப்பதற்கு சிங்களத் தலைவர்கள் காலத்துக்கு காலம் பல ஒப்பந்தங்களைச் செய்தார்கள். அந்தஒப்பந்தங்கள் அவர்களதுதலைமைகளாலும்அமைப்புகளாலுமேதோற்கடிக்கப் பட்டன. டி. எஸ். சேனநாயக்காமுதல் ஜே. ஆர். ஜெயவர்த்தனா வரை ஐக்கிய இலங்கையிலே தமிழர்கள் பிரச்சினையை தீர்க்க முயற்சித்தார்கள். பிரேமதாஸாவும் அதனையே சாதிக்கப் பார்க்கிறார். ஆனால் ஐக்கியத்தைப் பற்றி பேசும் சிங்களத் தலைவர்கள் ஐக்கியத்துக்கானஎந்த அமைப்பையும் ஏற்படுத்தவில்லை. மாறாக தமிழ் தலைவர்களே இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாத்தார்கள். இதனை நான் பின்வரும் இரண்டு அம்சங்களுடாகவே அடையாளம் காட்டலாம்.

1919 ஆண்டு சேர். பொன் அருணாசலத்தின் தலைமையில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் உதயமானது. இது அன்றைய பிரித்தானிய ஆட்சியாளருக்கு பல நெருக்கடியைக் கொடுத்தது. அதே வேளை இன வேறுபாடுகளைக் கடந்து முழு இலங்கையையும் ஐக்கியப் படுத்துவதற்கான கருவைக் கொண்டிருந்தது. சுயாட்சிக்குரியகோரிக்கையை முன் வைத்து அருணாசலம் சிங்களவர்களையும், தமிழர்களையும்ஐக்கியப்படுத்தி, இலங்கையின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான அடிப்படையை முன் வைத்தார். இதனைக் கண்டு அச்சமடைந்த பிரித்தானியர் தேசிய காங்கிரஸை உடைப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டனர். இதனை கே. எம். டி. சில்வா தனது History ofCeylon என்றநூலில் மிகவும் தெளிவாக கூறுகின்றார். தேசிய காங்கிரஸை உடைப்பதில் பிரித்தானியருக்கு துணை போனவர்கள் சிங்களவர்களே! ஐக்கியத்தை விரும்பிய சிங்களத் தலைவர்கள் ஏன் இதனைத்தடுக்க முயலவில்லை ?

இன்னோர் விடயத்தை இதில் நினைவு படுத்தலாம். 1915-ம் ஆண்டுசிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடந்தகலகத்தில் சிங்களவரை பிரித்தானியர் கொடுமைப் படுத்தி நசுக்கினார்கள். அப்போது அருணாசலத்தின் சகோதரனாகிய சேர். பொன் இராமநாதன் பிரித்தானியா சென்று சிங்களவருக்காகநியாயம் கேட்டார்.

இதே போன்று 1920 களின் மத்தியில் ஹன்டி பேரின்பநாயகத்தின் தலைமையில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் உதயமானது இதனைப் பொறுத்தவரையாழ்ப்பாணத்தில் தோன்றினாலும் ஐக்கிய இலங்கை, தேசிய ஐக்கியம் போன்ற எண்ணங்களைக்

**லிங்கன்**

கொண்டிருந்தது. அதற்கான கோரிக்கையையும் முன் வைத்திருந்தது. இதனுடைய தலைமை காந்தி, நேரு, போன்ற இந்தியத் தலைவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கை முழுவதையும் உள்ளடக்கியதேசிய எழுச்சிக்கான சிந்தனையை கொண்டிருந்தது.

இதனை சற்று தெளிவாக நோக்குவோம். 1925 ஆம் ஆண்டு நடந்த இதனுடைய ஆண்டு விழாவில் தென்பகுதி சிங்களவரான பி. டி. எஸ். குலரத்ன அழைக்கப்பட்டு தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார். இதனைவிட 1927 ஆம் ஆண்டு காந்தி இலங்கைக்கு வந்தபோது காந்தியின் கதர் இயக்கத்துக்கு இலங்கை முழுவதும் நிதி திரட்டப்பட்டது. மொத்தமாகசேகரிக்கப்பட்ட ஒரு இலட்சத்து ஐயாயிரம் ரூபாவில் யாழ்ப்பாணத்தில் சேர்க்கப்பட்ட பதினோராயிரத்தைத் தவிர மீதி சிங்கள பிரதேசங்களிலேயே சேகரிக்கப்பட்டன. அத்துடன் யாழ். வாலிபகாங்கிரஸின்பல கிளைகள் தென்பகுதியிலும் முக்கியம் பெற்றதாக விளங்கியது. எனவே இலங்கையின் ஐக்கியத்தில் அரசியல் ரீதியாக பலம் வாய்ந்த சக்தியாக அந்தக் காலகட்டத்தில் இது விளங்கியது.

ஆனால் இவற்றுக்குப் புறம்பாக சிங்களவர்கள் மத்தியிலிருந்து எழுந்த அமைப்புக்கள் இதற்கு முரணாகவே இருந்தன. 1922 ஆம் ஆண்டு ஏ. ஈ. குணசிங்காவினால் ஆரம்பித்த இலங்கை தொழிலாளர் சங்கம், பெரும்பன்மை சிங்களவரையும், கொழும்புத் தொழிலாளரையும் மையமாகக் கொண்டிருந்தது. இதேபோல் தான் 1927 ஆம் ஆண்டு கண்டிச் சிங்களவரினால் தொடங்கப்பட்ட கண்டியன் அசெம்பிளி விளங்கியது. இது சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தும் போராடியும் வந்தது. எனவே சிங்களவரினது எந்த அமைப்பும் தமிழர்களின் அமைப்புக்களைப்போல் காணப்படவில்லை என்பது தெளிவாகிறது.

இந்தப் பின்னணியில் இன்னோர் நிகழ்வைக் கூறலாம். அதாவது 1926 ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வந்தபோது கூறியதாவது: இலங்கையில் பல இனங்கள் வாழ்கின்றபடியினால் சமஷ்டி ஆட்சி முறையே பொருத்தமானது இதற்கு எதிராக ஆயிரத்திபொரு எதிர்ப்புகள் வரலாம் ஆனால் இறுதியில் சமஷ்டியே தீர்வாகும் என்றார்.

அருணாசலம், ஹன்டிபேரின்நாயகம் போன்றவர்களின் கருத்துக்களில் எனக்கு பல முரண்பாடுகள் உண்டு அவர்கள் அரசியலில் சாமர்த்தியசாலிகள் அல்ல. ஆனால் இலங்கையின் ஐக்கியத்தை பாதுகாப்பதில் முன்னின்று உழைத்தவர்கள் தமிழர்களே. இதில் துயரம் என்னவென்றால் ஐக்கியம் தேவைப்பட்ட சிங்களத் தலைவர்கள் ஐக்கியம் பேசவில்லை. சிறுபான்மையினராக இருந்துகொண்டு தமிழர்கள் ஐக்கியத்தைப் போதித்தார்கள். இதனுடைய விளைவை நாம் இன்று அறுவடை செய்கின்றோம். நாம் ஐக்கியம் பேசிய போது அவர்கள் சமஷ்டி கோரினார்கள். அவர்கள் ஐக்கியம் பேசும் போதும் நாம் தனிநாடு கோருவது நியாயமானதே.

**சோவியத்தின் அணுசக்தி**

# விஞ்ஞானிகளைத் திரட்ட ஈரான் முயற்சி செய்கிறது

- பிரிட்டன் சண்டே ரைம்ஸ்

(லண்டன்)

முன்னாள் சோவியத்யூனியனின் அணுசக்தி விஞ்ஞானிகளைத் திரட்ட ஈரான் முயற்சித்து வருகின்றது என்று பிரித்தானிய 'சண்டேரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஈரான் முயற்சித்து வருவதற்கான முதலாவது சான்றுகள் கிடைத்திருப்பதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

பலவிஞ்ஞானிகள்ஈரானுக்கு விஜயம் செய்திருந்தனர். ஆனால் ஒப்பந்தம் எதிலும் அவர்கள்கைச்சாத்திடவில்லை என்றும், அணுகுண்டு ஒன்றைச் செய்வதற்கு சோவியத் நிபுணர்களின் உதவிக்காக 3.50,000 டொலர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ஈரான் முன்வந்திருப்பதாக ஈரானிய அரசியல், விஞ்ஞான வட்டாரங்களை ஆதாரம் காட்டியும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சோவியத் முஸ்லிம்குடியரசுகளில் உள்ள விஞ்ஞானிகள் மீதே ஈரான் சிரத்தை காட்டி வருவதாகவும், ஒரு விஞ்ஞானிக்கு மாதம் 20,000 டொலர் சம்பளம் வழங்க அது முன் வந்திருப்பதாகவும்,

கஸாகிஸ்தான் விஞ்ஞானி உட்பட சில விஞ்ஞானிகளை ஈரான் அணுகியதாகவும் அப்பத்திரிகை மேலும் கூறியது.

# தமிழ்த்தினப் போட்டி

# சேவை நலம் பாராட்டு விழா

(கோப்பாய்)

வைத்திய சாலையில் பல வருடங்களாக வைத்திய கலாநிதியாக கடமையாற்றி தற்போது சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள மயில்வாகனம் நல்லைநாதன் அவர்களு...

# தமிழரின் பொறுமையை பலவீனமாக கருதக்கூடாது

## ஜெயலலிதா கன்னடத்திற்கு எச்சரிக்கை

(சென்னை)

தமிழக மக்களின் பொறுமையை பலவீனம் என்று கருதக் கூடாது என்று தமிழகமுதலமைச்சர் செல்விஜெயலலிதா கன்னட வெறியர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில்பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் 'சாதுமிரண்டால் காடுகொள்ளாது' என்ற பழமொழியை அவர்கள் அறிந்திருக்கவில்லைப் போல் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# புளியங்குளம் பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம்

[வவுனியா]

வவுனியவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் மாபெரும் பொதுக்கூட்டம் புளியங்குளம் பகுதியில் நடாத்தப்பட இருக்கின்றது

எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள இப்பொதுக்கூட்டத்தில் திரு மு. திருநாவுக்கரசு அவர்களும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலக உறுப்பினர் திரு. தினேஷ் அவர்களும் கலந்துகொண்டுஉரைநிகழ்த்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மறுநாள் நான்காம் திகதி கனகராயன்குளம் பகுதியிலும் பொதுக்கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்...

மக்கள் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொள்வத னாலேயே போராட்டம் முன்னேறிச் செல்வதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

உலகில் தேசிய இனங்களின் ஆயுதப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பல்வேறு பகுதியிலும் மக்கள் பெருமளவில் நேரடியாகப் போராட்டத்தில் பங்கு கொண்டே வருகின்றார்கள். அது போராட்டத்திற்கு எழுச்சியைக் கொடுப்பதாகும். இதேவேளை ஒப்பீட்டளவில் தமிழ்மக்கள் நேரடியாகப் போராட்டத்தில் பங்கு கொள்வது குறைவு என்றே சொல்லுதல் வேண்டும்.

இந்தியக் குடியரசு தினமான இம்மாதம் 26ஆம் திகதி காஷ்மீரில் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருந்தது. கன்னியா குமரியில் இருந்து காரில் ஒற்றுமை யாத்திரை சென்ற பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் முரளி மனோகர் ஜோசி காஷ்மீருக்கு மட்டும் ஹெலிகொப்டரில் சென்று இந்திய தேசியக் கொடியை சிறிநகரில் ஏற்றினார். இதற்கு காஷ்மீரில் மக்களின் வலுவான எதிர்ப்பு இருந்த போதிலும், ஊரடங்கு உத்தரவால் வெளியில் வந்து மக்களால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடமுடியவில்லை. ஆனால், அடுத்த நாள் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக மூன்று மணி நேரம் ஊரடங்கு தளர்த்தப்பட்டபோது மக்கள் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்வதை விட்டு விட்டு இந்திய அரசிற்கெதிராக வீதிகளில் இறங்கிப் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவ்வாறு மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்போது அம்மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகள் உலகைச் சென்றடைந்தன.

இதேபோன்றே பாலஸ்தீனியர்கள் நாற்பது வருடங்களுக்கு மேலாக ஆயுதப் போராட்டத்தை நடத்தி வந்த போதும், அவர்கள் மக்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை. இஸ்ரேலிய இராணுவத்திடம் கொடிய சித்திரவதைக்கு உள்ளாக நேரிடும் என்ற நிலையிலும் வீதிகளில் இறங்கி இஸ்ரேலிய இராணுவத்திற்கு எதிராகப் போராடியே வருகின்றனர்.

ஆனால், இவ்வாறான போராட்டங்களில் தமிழ் மக்கள் பெரியளவில் ஈடுபடுவதில்லை. தமிழரின்தேசிய இனப் பிரச்சினை விடுதலைப் புலிகளின் தனியான பிரச்சினையல்ல. இது அனைத்து தமிழ் மக்களினதும் பிரச்சினை. இதன் எழுச்சியை தமிழ் மக்கள் உலகிற்கு தெளிவாகவெளிப்படுத்தியமை மிகவும் குறைவு சிங்களப் பேரினவாதசக்திகளில் தமிழ் மக்கள்ஒடுக்கப்படுகின்றார்கள்என்பதும். தமிழருக்குத் தனியாக ஒருநாடு உருவாக வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்ளும் தமிழ் மக்கள் நேரடியாக மக்கள் போராட்டங்களில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

1983 ஆம்ஆண்டிலிருந்துஇன்றுவரை தொடர்ச்சியான ஆயுதப் போராட்டத்திற்கு முகம் கொடுத்ததினால்மக்கள் களைப்படைந்தோ சலிப்படைந்தோ விட்டார்கள் என்று கூறி விடமுடியாது. ஏனெனில் சுதந்திரத்திற்காகப்போரிடும்எந்தத்தேசியஇனமும் சலிப்படைந்துவிடுதலைப்போராட்டங்களைக்கைவிட்டுவிடுவதாகஇல்லை. அவ்வாறு கைவிடுவதானால் நாற்பது வருடங்களுக்கு மேலாகப் போராடும் காஷ்மீரியர்களும், பாலஸ்தீனியர்களும் போராட்டங்களைக் கைவிட்டிருக்க வேண்டும். அடக்கு முறைக்குப் பணிந்து போயிருக்க வேண்டும். ஆனால், அங்கு தொடர்ந்தும் மக்கள் போராட்டங்கள் நடக்கின்றன. இராணுவ அடக்கு முறைக்கு எதிராக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்கள் செய்கின்றார்கள்.

இந்நிலையில் சுதந்திரப் போராட்டத்தை ஆயுதம் தாங்கிய போராளிகளிடம் ஒப்படைத்து விட்டோம், எமது கடமை முடிந்து விட்டது என மக்கள் எண்ணுதல் கூடாது. அதுதவறாகும். தமது தேசிய எழுச்சியை மக்கள் தொடர்ந்து காட்டிக்கொண்டே இருக்கவேண்டும். இராணுவ வெற்றிகள் வரலாம், போகலாம். ஆனால் போராட்டத்திற்கு உயிரோட்டமாக இருப்பது மக்களின் தேசிய உணர்வே. இத்தேசிய உணர்வே போராளிகளை உருவாக்குவது. விடுதலைக்கு வழி சமைப்பது.

# ஈரான் முயற்சி செய்கிறது

## - பிரிட்டன் சண்டே ரைம்ஸ்

(லண்டன்)

முன்னாள் சோவியத்யூனியனின் அணுசக்தி விஞ்ஞானிகளைத் திரட்ட ஈரான் முயற்சித்து வருகின்றது என்று பிரித்தானிய 'சண்டேரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஈரான் முயற்சித்து வருவதற்கான முதலாவது சான்றுகள் கிடைத்திருப்பதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

பலவிஞ்ஞானிகள்ஈரானுக்கு விஜயம் செய்திருந்தனர். ஆனால் ஒப்பந்தம் எதிலும் அவர்கள்கைச்சாத்திடவில்லை என்றும், அணுகுண்டு ஒன்றைச் செய்வதற்கு சோவியத் நிபுணர்களின் உதவிக்காக 3.50,000 டொலர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ஈரான் முன்வந்திருப்பதாக ஈரானிய அரசியல், விஞ்ஞான வட்டாரங்களை ஆதாரம் காட்டியும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சோவியத் முஸ்லிம்குடியரசுகளில் உள்ள விஞ்ஞானிகள் மீதே ஈரான் சிரத்தை காட்டி வருவதாகவும், ஒரு விஞ்ஞானிக்கு மாதம் 20,000 டொலர் சம்பளம் வழங்க அது முன்வந்திருப்பதாகவும்,

கஸாகிஸ்தான் விஞ்ஞானி உட்பட சில விஞ்ஞானிகளை ஈரான் அணுகியதாகவும் அப்பத்திரிகை மேலும் கூறியது.

# தமிழ்த்தினப் போட்டி திகதிகள் அறிவிப்பு

இவ்வாண்டுக்கான தமிழ் மொழித்தின போட்டிகள் தொடர்பான திகதிகள் கல்வியமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளன இதன்படிபாடசாலை மட்டத்திலான போட்டிகள் பெப்ரவரிமாதம் பதினைந்தாம் திகதிக்குமுன்னதாகவும், கோட்டமட்டத்திலான போட்டிகள் மார்ச் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னதாகவும் மாகாண மட்டத்திலான போட்டிகள் மேமாதம் இருபத்தைந்தாம் திகதிக்கு முன்னதாகவும் நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகிறது. (இவ்வருடம் கொத்தணி மட்டத்திலான போட்டிகள் ஒழுங்கு செய்யப்படவில்லை.)

மேற்படி போட்டிகளில் நான்காம் ஐந்தம் ஆண்டுகள் முதலாம் பிரிவாகவும், ஆறம் ஏழாம் எட்டாம் ஆண்டுகள் இரண்டாம் பிரிவாகவும், ஒன்பதாம் பத்தாம் பதினோராம் ஆண்டுகள் மூன்றாம் பிரிவாகவும், பன்னிரண்டாம் பதின்மூன்றாம் ஆண்டுகள்நான்காம் பிரிவாகவும் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன பிரிவு ரீதியல்லாத திறந்த போட்டியாகவும் போட்டி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (20)

## டடா சட்டத்தில் கைதான

# முன்னாள் அமைச்சரின் கணவர் விடுதலை

(சென்னை)

'டடா' ச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தி. மு. க முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசின் கணவர் திரு. ஜெகதீசன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஆனால் திருமதி சுப்புலட்சுமி இதுவரை பிணையில் விடுவிக்கபபடவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மொஸ்கோ மாநாட்டை பாலஸ்தீனியர் புறக்கணிப்பு

(மாஸ்கோ)

மத்திய கிழக்கில் அமைதி ஏற்படுத்துவது தொடர்பான அரபு - இஸ்ரேலிய மாநாடு நேற்று முன்தினம் மாஸ்கோவில் ஆரம்பித்தது. இம்மாநாட்டில் பாலஸ்தீன. விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை. எனினும் மாநாட்டில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதிநிதித்துவம் தொடர்பாக ஆராய பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் சிலர் நேற்று ரியூனிலிருந்து மாஸ்கோவிற்கு சென்றனர்.

இதேவேளை நாடு கடத்தப்பட்ட அல்லது அரபு ஜெருசலேம் பகுதியில் வாழும் பாலஸ்தீனியர் எவரும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை பிரதிபலித்து மாநாட்டில் கலந்து கொள்வதை இஸ்ரேல் நிராகரித்துள்ளது. மாஸ்கோவில் நேற்று ஆரம்பமான மாநாடு அரபுக்களும், இஸ்ரேலியர்களும் சமாதானத்தின் மீது கொண்டுள்ள ஆர்வத்தை ஆணித்தரமாக எடுத்துக்காட்டுவதாக அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ்பேக்கர் குறிப்பிட்டார்.

# சேவை நலம் பாராட்டு விழா

(கோப்பாய்)

வைத்திய சாலையில் பல வருடங்களாக வைத்திய கலாநிதியாக கடமையாற்றி தற்போது சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள மயில்வாகனம் நல்லைநாதன் அவர்களுக்கு சேவைநலம் பாராட்டு விழாவொன்றினை கோப்பாய் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை ஒழுங்கு செய்துள்ளது.

இவ்விழா வரும் 2 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

# விவசாயக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ்கழகம், கந்தரோடை ஸ்ரீசுப்பிரமணிய சனசமூக நிலையத்துடன் இணைந்து யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆ. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் விவசாயக் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தவுள்ளது.

''சமகால விவசாய, கால்நடை வளர்ப்புப் பிரச்சினைகள்' எனும்தலைப்பிலானஇக் கலந்துரையாடலில் கே. குணரத்தினம், எஸ். பொன்னுத்துரை, எஸ். விஜயரத்தினம், எஸ். கனபாலசிங்கம், மு. சந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

# விநியோகம் நடைபெறவில்லை

(சங்கானை)

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் மூலமாக விநியோகிக்கப்பட்டு வரும் துவிச்சக்கரவண்டி ரயர்.ரியூப் ஆகிய பொருள்கள் சில பகுதிகளில் பாவனையாளர்களுக்கு சென்றடையவில்லை. 11 ஆம் இலக்க கிளைக்கு எடுத்து வரப்பட்ட மேற்படி பொருள்களின் விநியோக முறையில் ஏற்பட்ட மோசடி காரணமாக இக்கிளையில் விநியோகம் இடைநிறுத்தப்பட்டிருப்பதால் பாவனையாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

தமிழக மக்களின் பொறுமையை பலவீனம் என்று கருதக் கூடாது என்று தமிழக முதலமைச்சர் செல்விஜெயலலிதா கன்னட வெறியர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மொன்றில் பேசிய அவர் 'சாதுமிரண்டால் காடுகொள்ளாது' என்ற பழமொழியை அவர்கள் அறிந்திருக்கவில்லைப் போல் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# புளியங்குளம் பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம்

[வவுனியா]

வவுனியவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் மாபெரும் பொதுக்கூட்டம் புளியங்குளம் பகுதியில் நடாத்தப்பட இருக்கின்றது

எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள இப்பொதுக்கூட்டத்தில் திரு மு. திருநாவுக்கரசு அவர்களும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரேஷ்ட உறுப்பினர் திரு. தினேஷ் அவர்களும் கலந்துகொண்டுஉரைநிகழ்த்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மறுநாள் நான்காம் திகதி கனகராயன்குளம் பகுதியிலும் பொதுக்கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (தி)

## அணு சக்தி

# தொடர்பான பேச்சுக்கள திருப்தியாக இல்லை

## -- டுமாஸ்

(மின்ஸ்க்)

சுதந்திர காமன்வெல்த்தின் அணுசக்தி நாடுகள் நான்கின் தலைவர்களுடன், நடந்தபேச்சுவார்த்தைகளில் தாம் முழுத்திருப்தி கொள்ளவில்லை என்று பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் ரோலண்ட்டுமாஸ் கூறினார்.

ஐந்துநாள்விஜயமென்றை மேற்கொண்டு ரஷ்யா, உக்ரைன், கஸகிஸ்தான், பெலாரஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த டுமாஸ் முன்னாள் அணுசக்தி தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி குறித்து எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை எனவும் இந்தப் பேச்சுக்கள் பூரண திருப்தியைத் தரவில்லை எனவும் குறிப்பிட்டார்.

மேலும் பெப்ரவரி 14இல் மின்ஸ்க் நகரில் நான்கு நாட்டுத் தலைவர்களும் சந்தித்து தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்து பேச்சுக்கள் நடத்துவர் எனவும், இந்தப் பேச்சுக்கள் கசக்கவும் கூடும் எனவும் சிலசமயத்தில்கொந்தளிப்பானவையாகவும் அமையக் கூடுமென்றும் தெரிவித்தார்.

## சோவியத் துருப்புக்களை

# மீளப் பெற்றுக் கொள்ள பால்டிக்அரசுகள்கோரிக்கை

தங்கள் பகுதிகளிலுள்ள முன்னாள் சோவியத் துருப்புகள் அனைத்தையும் விரைவாக திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு ரஷ்யத் தலைவர் பொரிஸ் யெல்சினை மூன்று பால்டிக் குடியரசுகளும் கோரியுள்ளன.

எஸ்தோனியா, லட்வியா, லித்வேனியா ஆகிய மூன்று நாடுகளின் பாராளுமன்ற அங்கத்தினர்களைக் கொண்ட பால்டிக் சபையே இத்துருப்புக்களை முற்றாக திருப்பிப் பெறுமாறுகேட்டுக்கொண்டன

இந்த நாடுகளில் நாற்பதினாயிரம் சோவியத் துருப்புகள் நிலைகொண்டுள்ளன என்றும், இத் துருப்புக்கள் உடனடியாக திரும்பப்பெற வேண்டும் என்றும் இச்சபை கோரியுள்ளது.

எமது நாடுகள் ஐம்பது ஆண்டுக்கால மொஸ்கோ ஆட்சிக்குப்பின் கடந்த செப்டம்பரில் சுதந்திரம் பெற்றது என்றும், எங்கள் நாடுகளிலுள்ள சோவியத் துருப்புகளை ஒரு ஆக்கிரமிப்பு இராணுவமாக நாம் கருதுகிறோம் என்றும் இச் சபை தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனால் கிழக்கைரோப்பாவிலிருந்து லட்சக்கணக்கான துருப்புக்களை திரும்பப் பெற்று அவர்களைக் குடியமர்த்துவதே தமக்கு பெரும் பிரச்சினையாக இருப்பதாக சோவியத் அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஈழநாதம்

# அமெரிக்க பாதுகாப்பு செலவில் 5000 கோடி டாலர் குறைப்பு

## ஏவுகணை உற்பத்தியை குறைக்க புஷ் முடிவு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் ஏவுகணை உற்பத்தியை கணிசமாகக் குறைத்து, பாதுகாப்புச் செலவையும் குறைக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதிஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வாஷிங்டனில் நாட்டு நிலைமைகள் குறித்து தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜோர்ஜ் புஷ் பாதுகாப்புச் செலவில் ஐயாயிரம் கோடி டொலரை குறைத்து மிச்சமாகும் தொகையைக் கொண்டு வரியைக் குறைக்கப் போவதாக தெரிவித்தார்.

B-02 குண்டு வீச்சு விமானங்களின் உற்பத்தி நிறுத்தப்படுமென்றும்,

நிலத்திலிருந்து இயக்கப்படக்கூடிய பல ஆயுதங்களைக் கொண்ட பாலஸ்ரிக் ஏவுகணைகள் எல்லாவற்றையும் முற்றிலுமாக அழித்து விடுமாறு ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினை தாம் கேட்டுக் கொள்வதாகவும் ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்.

தனது வேண்டுகோளை யெல்சின் ஏற்றுக்கொண்டால் அமெரிக்காவும் எல்லா ஏவுகணைகளையும் அழிக்கும் என்றும்,

கடலிலிருந்து இயக்கப்படும் ஏவுகணைகளுக்கான ஆயுதங்களின் எண்ணிக்கையையும்மூன்றில் ஒரு பகுதியாக குறைத்துக் கொள்ளும் என்றும்

இதேவேளை ரஷ்யா தனது நீண்ட தூரம் பாயும் குறூஸ் ஏவுகணைகளையும் கப்பல்களில் பொருத்தப்பட்டுள்ள நீண்டதூர ஏவுகணைகளையும் அழித்துவிட தயாராக இருப்பதாக ரசியா ஜனாதிபதி பொறிஸ் யெல்சின் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆப்கான் விவகாரத்தில் பாக். திடீர் மன மாற்றம்

[இஸ்லாமாபாத்]

ஆப்கானிஸ்தானில் போரில் ஈடுபட்டிருக்கும் சகல குழுக்களையும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வருமாறு பாகிஸ்தான் கேட்டுக் கொண்டுள்ளது ஐ. நா. சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதன் மூலம் போரை முடிவுக்கு கொண்டுவருமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

ஐ நா. சபையினால் முன்வைக்கப்பட்ட சமாதான திட்டத்தையும் பாகிஸ்தான் அங்கீகரித்துள்ளது. அத்துடன் ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசை நிறுவுவதற்கும் யோசனை தெரிவித்துள்ளது.

சமாதான பேச்சுவார்த்தை சம்பந்தப்பட்ட பிராந்தியத்திற்கு வெளியே நடைபெறும் எனவும் சகல தரப்பும் இதன் மூலம் நன்மை பெறமுடியும் என்றும் ஐ. நா. செயலாளர் நாயகம் பூட்றஸ் காலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

### பேயாடிக்

இரு கண்களும் வெளித் தெரியும்படி காட்சி தரும் இவர் ஆணா அல்லது பெண்ணா என அறியப்படவில்லை.

இத்தலையாட்டி நிறுத்தப்பட்ட காரணத்தினால் அப்பாவிப் பொதுமக்கள்மத்தியில் பீதிநிலை ஏற்பட்டுள்ளது. (தி

### சமஷ்டி

கீழ் சுதந்திரமாக வாழ்வது, பயமின்றி வாழும் சுதந்திரம், சிந்திக்கும் சுதந்திரம், பேச்சுத் சுதந்திரம் ஆகியன நசுக்கப்பட்டுள்ளன. ஐ. நா. சாசனத்திலுள்ள மனித உரிமைகள் அனைத்து யாப்புகளிலும்

## பிரிட்டனில் இருந்து பிரிய ஸ்கொட்லாண்ட் விருப்பம்

(லண்டன்)

பிரிட்டனிலிருந்து பிரிந்து தனிநாடாக இயங்க ஸ்கொட்லான்ட் மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். அண்மையில் இடம்பெற்ற கருத்துக் கணிப்பு மூலம் மக்கள் தமது விருப்பத்தை தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய சுதந்திரநாடுகளுடன் தன்னாட்சியும் சுதந்திரமும்இறைமையும்கொண்ட தனிநாடாக ஸ்கொட்லாண்ட் இருக்க வேண்டும் என்று ஸ்கொட்லான்ட் தேசியக் கட்சி தலைமைப்பீடம் கருத்து தெரிவித்துள்ளது.

## போலந்திலிருந்து படை விலக்கல்

(வார்சோ)

போலந்து நாட்டில் தங்கி இருக்கும் முன்னாள் சோவியத் யூனியனின் துருப்புக்கள் நாற்பத்தையாயிரம் பேரும் விரைவில் விலக்கிக்கொள்ளப்படவுள்ளனர். இப்படைகளின் தளபதி கடந்த ஞாயிறன்று போலந்தின் நலைநகர் வார்சோவில் இதனைத் தெரிவித்தார்.

## தென்னாபிரிக்கா மீதான பொருளாதாரத்தடை நீக்கம்

(பரிஸ்)

தென்னாபிரிக்காவிற்கு எதிராக இருந்த அனைத்துப் பொருளாதாரத் தடைகளையும் ஐரோப்பிய பொருளாதார சமூகம் நீக்கி விட்ட

இவை தங்கக் காசுகள், இரும்பு, எஃகு போன்ற பொருள்களின் இறக்குமதி தொடர்பான தடை நடவடிக்கைகள் ஆகும்.

## மூன்றாம் கட்ட ஜனசவிய வடக்கு, கிழக்கிற்கு இல்லை

ஜனசவிய மூன்றாம் கட்டம் பெப்ரவரி 10ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்றும், நிலைமை சீரடைந்தால் மட்டுமே வடக்குக் கிழக்கில் அது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது

இத்திட்டம் முப்பத்திமூன்று அரசாங்க, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஆரம்பமாகின்றன என்றும்,

இதில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பதின்மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் அடங்கும் என்றும்,

ஆனால் வடக்குக் கிழக்கில் நிலைமைகள் சீரானால் மட்டுமேதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

## திறமை அடிப்படையில் அரசாங்க நியமனங்கள்

(கொழும்பு)

அரசாங்க சேவைக்கு திறமை அடிப்படையிலும், தராதர அடிப்படையிலுமே மேயே ஊழியர்கள் இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், இதனை அரசியல் யாப்பில் ஒரு விதியாகசேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க பாராளுமன்றக் குழுவில் எடுக்கப்பட்ட ஏகமனதான முடிவினை அடுத்து இதற்கு வழிவகை செய்யும் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அரசியல் யாப்புமுன் சேவையாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இனிமேல் அரசாங் சேவைக்கான சகல நியமனங்களும் தராதர அடிப்படையிலும்திறமை அடிப்படையிலும் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்றும்.

இந்தப்புதிய சட்டத்தின்படி அரசாங்க சேவைக்கு நியமிக்கப்படும் ஒருவர் தகுதியற்றவர் என்றால் இந்த நியமனத்தை எதிர்த்து எவரும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு - கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு நிதியில் மோசடி; வங்கி எல்லைகள் மாற்றம்

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றிடமிருந்து வடக்கு கிழக்குப் பகுதிகளின் புனர்வாழ்வு புனரமைப்பு தேவைகளுக்கெனப் பெறப்பட்ட பல கோடி ரூபாவை தற்போது எல்லையோரங்களில் சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதற்கும், மற்றும் சிங்களக் கிராமங்களை வளம்படுத்தவும் சிறிலங்கா அரசாங்கம் பயன்படுத்தி வருகிறது. இதற்கு வசதியாக வங்கிகள் மற்றும் சில அரச நிறுவனங்களின் நிர்வாக எல்லைகள் மாற்றப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற இலங்கை, இந்திய இராணுவ நடவடிக்கைகளால் சிதைவடைந்த பகுதிகளை புனரமைப்பதற்காகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காவும் உலக வங்கியிடம் இருந்தும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்தும் பல மில்லியன் ரூபா நிதி உதவியை சிறிலங்கா அரசு பெற்றுக்கொண்டது.

மேற்படி நிதியை வடக்கு கிழக்கின் பாதிக்கப்பட்ட மக்கள் பயன் பெறும் விதத்தில் பயன்படுத்த அரசு தவறிவிட்டது. எனினும் உதவியாகப் பெறப்பட்ட நிதி முழுவதும் குறிப்பிட்டகால எல்லைக்குள் வடக்கு கிழக்கில் பயன்படுத்தியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்காகவும், சிங்கள குடியேற்றத்தை துரிதப் படுத்துவதற்காகவும் அம்பாறை, வவுனியா ஆகிய வடகிழக்கின் எல்லை ஓப்ர பகுதிகளில் மேற்படி நிதியை அரசு செலவிட்டுவருகின்றது.

அரச வங்கிகள் மூலம் கடன் திட்டங்களையும், மானியத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்காக வடபிராந்திய மக்கள் வங்கி அலுவலகத்தின் கீழ் இயங்கிவந்த வவுனியா மக்கள் வங்கி கிளையை அனுராதபுரம் பிராந்திய அலுவலகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல மட்டக்களப்பு பிராந்திய மக்கள் வங்கி அலுவலகத்தின் கீழ் இருந்த கிளை அலுவலகங்கள் அம்பாறை பிராந்திய அலுவலகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. யாழ். மாவட்ட இலங்கை வங்கி அலுவலகத்தின் கீழ் இயங்கிவந்த கிளிநொச்சி இலங்கை வங்கி கிளை வவுனியா மாவட்ட இலங்கை வங்கி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது

இப்பிராந்திய வங்கியின் கீழ் உள்ள கிளை அலுவலகங்கள் மூலம் சகல புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் அதிகளவு நிதி கடனாக வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி நிதியின் ஒரு பகுதி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் செலவிடப்பட்டிருப்பதாக அவ்வப்பகுதிகளில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. [க]

## தென்மராட்சியில் கல்வி அபிவிருத்திக்கழக ஆசிரிய தெரிவுப் பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் கல்வி அபிவிருத்திக்கழகம் மூலம் நியமிக்கப்படவிருக்கும் தற்காலிக ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை பின்வரும் திகதிகளில் கொத்தணி ரீதியாக நடைபெறும். ஏற்கனவே விண்ணப்பிக்காதவர்களும் உரிய ஆவணங்களுடன் நேரில் கலந்து கொள்ளலாம்.

01-02-92 மு.ப. 8.30 வரணி மகா வித்தியாலயம், பி ப. 01.30 கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்

02-02-92 மு. ப. 8.30 உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், பி.ப. 01.30 சாவகச்சேரி இந்துக் கல்லூரி

03-02-92 மு ப.8.30 கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் பி.ப. 01.30 மட்டுவில் ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயம்

04-02-92 மு. ப. 8.30 சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி (மு)

## வேற்றுமையில் ஒற்றுமையை அரசு காண முயல்கிறதாம்

(கொழும்பு)

அமைதியை ஏற்படுத்துவதற்கு வேற்றுமையில் ஒற்றுமை காணும் கொள்கையில் சிறிலங்கா அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியுள்ளார். நல்லெண்ணத் தூது ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள ஜப்பானின் நிப்பொன்மாறு என்ற கப்பலுக்கு நேற்று முன்தினம், விஜயம் செய்த ஜனாதிபதி அங்கிருந்த இளைஞர்களிடையே உரைநிகழ்த்தினார். இக் கப்பலில் பதின்மூன்று நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் பயணத்தை மேற்கொண்டுள்ளனர் இவர்களில் இருபது பேர் இலங்கையர்களாவர்.

## அதிபர்கள் கூட்டம்

பாடசாலை மாணவ உணவு முத்திரை பெற்று வழங்குவ

## மீனவர் மீது

இராணுவத்தினர் பூவரசங் குளம் பகுதியில் மீன் பிடித்

## தற்காலிக ஆசிரியர்களுக்கு

கொண்டுள்ளது. ஐ. நா. சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்

## பேயாடிக்

இரு கண்களும் வெளித் தெரியும்படி காட்சி தரும் இவர் ஆணா அல்லது பெண்ணா என அறியப்படவில்லை.

இத்தலையாட்டி நிறுத்தப்பட்ட காரணத்தினால் அப்பாவிப் பொதுமக்கள்மத்தியில் பீதிநிலை ஏற்பட்டுள்ளது. (தி

## சமஷ்டி

கீழ் சுதந்திரமாக வாழ்வது, பயமின்றி வாழும் சுதந்திரம், சிந்திக்கும் சுதந்திரம், பேச்சுத் சுதந்திரம் ஆகியன நசுக்கப்பட்டுள்ளன. ஐ. நா. சாசனத்திலுள்ள மனித உரிமைகள் அனைத்து யாப்புகளிலும் இடம்பெற்றுள்ள போதிலும் மனித உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கப்படுவதில்லை என்றார்.

சிறிலங்கா யாப்பு மனித உரிமைகளை ஏற்றுள்ளது. ஆனால் அவசரகாலச் சட்டம் மனித உரிமைகளை மீறிச் செயல்படுகிறது. போராட்டம் இன்றி மனித உரிமைகளைப் பெறமுடியாது. பலம் குறைந்த ஆட்சியை எதிர்த்து மக்கள் போராடுவது சுலபமான காரியம், மக்கள் போராட்டத்தைத் தடுப்பதானால் மனித உரிமைகளை வழங்கியாக வேண்டும். அதைவிட வேறு வழியில்லை என்றும்,

மனிதன் சமூகத்துக்கு ஏதாவது சேவையாற்றுவதென்றால் அவனுக்குச் சிந்தனைச் சுதந்திரம் இருக்கவேண்டும். சமூகத்தில் பல வகையான கருத்தோட்டங்கள் சங்கமமாவதை எவராலும் தடுக்க முடியாது என்றும்,

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுள்ள பாராளுமன்றத்தில் இறைமைநிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்துக்குச் சமமானது. இரண்டினையும் எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## 10,000 தோட்ட

பிரச்சினை தீர்க்கப்படாதவிடத்து வேலை நிறுத்தம் தொடரும் எனவும் இ. தொ. காவின் நுவரெலியா அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி வேலை நிறுத்தத்தில் கொங்கோடியா, கோட்லொட்ஜ், பாக்மார்க்கஸ், பீட்ரு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தொழிற்சங்க வேறுபாடுகளை கடந்து கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கரித்துள்ளது. அத்துடன் ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசை நிறுவுவதற்கும் யோசனை தெரிவித்துள்ளது.

சமாதான பேச்சுவார்த்தை சம்பந்தப்பட்ட பிராந்தியத்திற்கு வெளியே நடைபெறும் எனவும் சகல தரப்பும் இதன் மூலம் நன்மை பெறமுடியும் என்றும் ஐ. நா. செயலாளர் நாயகம் பூட்றஸ் காலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

(வார்சோ)

போலந்து நாட்டில் தங்கி இருக்கும் முன்னாள் சோவியத் யூனியனின் துருப்புக்கள் நாற்பத்தையாயிரம் பேரும் விரைவில் விலக்கிக்கொள்ளப் படவுள்ளனர். இப்படைகளின் தளபதி கடந்த ஞாயிறன்று போலந்தின் நலைநகர் வார்சோவில் இதனைத் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்கா மீதான பொருளாதாரத்தடை நீக்கம்

(பரிஸ்)

தென்னாபிரிக்காவிற்கு எதிராக இருந்த அனைத்துப் பொருளாதாரத் தடைகளையும் ஐரோப்பிய பொருளாதார சமூகம் நீக்கி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை தங்கக் காசுகள், இரும்பு, எஃகு போன்ற பொருள்களின் இறக்குமதி தொடர்பான தடை நடவடிக்கைகள் ஆகும்.

## தத்திரிமலை

எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலின்போது

★ ரி-56-2 ரக துப்பாக்கி - 01
★ ரி-56-1ரகதுப்பாக்கிகள்-02
★ ரி-56 ரக மகசீன்கள் - 11
★ நடுத்தர ரவைகள் - 335

ஆகிய ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## ஒரே குடும்பத்தில்

வந்த இராணுவ கோஷ்டி ஒன்று அப்பலோ கணேஷ் என்று அழைக்கப்படும் குடும்பத் தலைவருடன் சேர்த்து அவரது மனைவியையும், மூன்று பிள்ளைகளையும் கடத்திச் சென்றுள்ளது.

இவர்கள் தற்போது எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள், இவர்களின் தற்போதைய நிலை என்ன என்பது பற்றி அறியப்படவில்லை.

கணேசபுரம் பகுதியில் தமது வீடுகளில்தங்கியிருந்தவர்களை விசாரணைக்கெனக் கூறி இராணுவம் அழைத்துச் சென்றது.

இராமசாமி, சிவசிதம்பரம், பரமசிவம், அவரது மனைவி, வேலுச்சாமி, அவரது மகன், சுமண என்கிற இளைஞன் உட்பட மொத்தம் பத்துப் பொது மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. இவர்களின் நிலைபற்றி அறிய முடியவில்லை.

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளில் வாழும் பொதுமக்களில் பலர் அடிக்கடி கைது செய்யப்படுவதும் காணாமல் போவதும் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்வாகும். (தி)

## கலந்துரையாடல்

வெகுஜனப் போராட்டம் பற்றிய முக்கிய கலந்துரையாடல் இன்று மாலை 4 மணியளவில் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலந்துரையாடலில் பொதுத்தாபனங்களின் பிரதிநிதிகள், சன சமூக நிலையங்களின் பிரதிநிதிகள் மற்றும் கல்வித் தாபனங்கள், வர்த்தக நிலையங்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளும்படி அமைப்புக்குழு வேண்டிக்கொள்கின்றது.

## 18 சிங்கள

பலர் காயமடைந்ததையும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தன.

இதேவேளை தாக்குதலுக்கு உள்ளான இராணுவ அணிக்கு உதவிக்கென வெலிக்கந்தை இராணுவ முகாம், சிங்கபுரம் முகாமிலிருந்து அரைமைல் தொலைவிலுள்ள குவாட்டஸ் காவலரணிலிருந்தும் வெளியேறிய இராணுவத்தினர் மீதும் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இதைத்தொடர்ந்து இராணுவத்தினர் தமது முயற்சியைக் கைவிட்டு முகாமிற்குள் முடங்கிக் கொண்டனர். இத்தாக்குதலில் இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## கைப்பற்றிய

★ ரி-56 மகசீன் - 15
★ ரி-81 மகசீன் - 05
★ ஜி-3, ஏ-3 மகசீன் - 18
★ ஐ. எம். ரவைகள் - 360
★ நேட்டோ ரவைகள் - 142
★ ஏ.கே.எல்.எம்.ஜி. லிங் - 274
★ ஏ.கே. கோல்சர் - 01
★ ஜி-3 ஏ-3 கோல்சர் - 01
★ தலைக்கவசம் - 10
★ தண்ணீர்க் கான் கோல்சர் - 01
★ மொபைல் செற் - 01
★ சப்பாத்து - 03 சோடி

ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை பின்வரும் திகதிகளில் கொத்தணி ரீதியாக நடைபெறும். ஏற்கனவே விண்ணப்பிக்காதவர்களும் உரிய ஆவணங்களுடன் நேரில் கலந்து கொள்ளலாம்.

01-02-92 மு.ப. 8.30 வரணி மகா வித்தியாலயம், பி ப. யம், பி.ப. 01.30 சாவகச்சேரி இந்துக் கல்லூரி

03-02-92 மு ப.8.30 கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் பி.ப. 01.30 மட்டுவில் ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயம்

04-02-92 மு. ப. 8.30 சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி (மு)

# வேற்றுமையில் ஒற்றுமையை அரசு காண முயல்கிறதாம்

(கொழும்பு)

அமைதியை ஏற்படுத்துவதற்கு வேற்றுமையில் ஒற்றுமை காணும் கொள்கையில் சிறிலங்கா அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியுள்ளார். நல்லெண்ணத் தூது ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள ஜப்பானின் நிப்பொன்மாறு என்ற கப்பலுக்கு நேற்று முன்தினம், விஜயம் செய்த ஜனாதிபதி அங்கிருந்த இளைஞர்களிடையே உரைநிகழ்த்தினார். இக் கப்பலில் பதின்மூன்று நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் பயணத்தை மேற்கொண்டுள்ளனர் இவர்களில் இருபது பேர் இலங்கையர்களாவர்.

# தற்காலிக ஆசிரியர்களுக்கு சேவைமுன்னோடிப் பயிற்சி

தற்காலிக ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படுவோருக்கு இரண்டு வார காலச் சேவை முன்னோடிப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேலாயுதம் தெரிவித்தார்.

தற்போது யாழ். மாவட்டத்தின் சகல கோட்டங்களிலும் தற்காலிக ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுவருவது தெரிந்ததே.

இந்த நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் ஐந்நூறு ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் திங்கட் கிழமை முதல் இரண்டு வாரங்களுக்கு ஆசிரியர் சேவை முன்னோடிப் பயிற்சியை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர் எதிர்வரும் பதினைந்தாம் திகதியளவில் இவர்கள் தமக்குரிய பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்பர் எனவும் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் இவ்வார இறுதியில் வெளியிடப்படும்எனத்தெரியவருகிறது

## இந்தியா

றனரா என்பதையும் அவர்களது நிலைமைகளை நேரடியாகச் சென்று அவதானிப்பதற்கு இலங்கையில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலய அதிகாரிகள் அனுமதி கோரியிருந்தனர். இதற்கு இரு நாட்டு அரசாங்கங்களும் முற்றாக மறுத்து விட்டன. இதனால் தாம் இவ்அகதிகளைப் பொறுப்பேற்கப் போவதில்லை என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயம் அறிவித்திருக்கிறது.

தாமாகவே விரும்பி நாடு திரும்ப முன்வரும் அகதிகளை பொறுப்பேற்பதற்கும், அவர்களை பராமரிப்பதற்கும் தொடர்ந்து மீளக்குடி அமர்த்தல், தொழில் வாய்ப்பு வழங்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு மேற்படி ஸ்தாபனம் தயாராக இருந்தது.

இதன் முதற்கட்டமாகத் திருக்கோணமலையில் உள்ள பீச் ஹோட்டலை வாடகைக்கு எடுத்து அகதிகள் முகாம் அமைப்பதற்காக மேற்படி ஸ்தாபனம் காத்திருந்தது. ஆனால் இறுதிநேரத்தில் இலங்கை, இந்திய அரசுகளின் மேற்படி நடவடிக்கைகளால் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் தமது திட்டத்தைக் கைவிட்டனர். தொடர்ந்து மேற்படி இரு அரசுகளிடம் தமது அதிருப்தியை இவ் ஸ்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க, ச)

## மாபெரும்

இன்று இரவு 7. 30 மணிக்கு பருத்தித்துறை பழைய பேருந்து நிலையத்திலுள்ள மேஜர் ரஞ்சன் சித்தப்பாவின் உருவப்பட முன்றலில் நடைபெறவுள்ளது.

இவ் நினைவு விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மற்றும் மகளிர் முன்னணி உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## இந்திய சிறிலங்க

ன்றை மேற்கொண்டு டில்லி சென்றுள்ளார்.

இரு நாடுகளும் பயன்தரும் விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்த இவர்கள் விபரங்கள் எதையும் வெளியிடவில்லை.

உலக வங்கியிடம் இருந்தும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்தும் பல மில்லியன் ரூபா நிதி உதவியை சிறிலங்கா அரசு பெற்றுக்கொண்டது.

மேற்படி நிதியை வடக்கு கிழக்கின் பாதிக்கப்பட்ட மக்கள் பயன் பெறும் விதத்தில் பயன்படுத்த அரசு தவறிவிட்டது. எனினும் உதவியாகப் பெறப்பட்ட நிதி முழுவதும் குறிப்பிட்டகால எல்லைக்குள் வடக்கு கிழக்கில் பயன்படுத்தியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்காகவும், சிங்கள குடியேற்றத்தை துரிதப்படுத்துவதற்காகவும் அம்பாறை, வவுனியா ஆகிய வடகிழக்கின் எல்லை ஓப்ர

# அதிபர்கள் கூட்டம்

பாடசாலை மாணவ உணவு முத்திரை பெற்று வழங்குவதில்ஏற்பட்டுள்ளநடைமுறைப் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடல் நாளை பி. ப. 2.00 மணிக்கு யா/ சாதனா பாடசாலை மண்டபத்தில் கூட்டப்படும் கூட்டத்தில் யாழ். மாவட்ட சமூக சேவைப்பகுதி ஆணையாளரும் உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொள்கிறார்கள் யாழ். கல்விக் கோட்ட சகல பாடசாலை அதிபர்களும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## உள்நாட்டு

கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டி இந்தத் தகவலை வெளியிட்டது.

நாட்டின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்து அரசாங்க அமைச்சர்கள், சிறிலங்கா இராணுவ அதிகாரிகள், அரசாங்க அதிபர்கள் ஆகியவர்களுடனும் சகல தரப்பினருடனும் தாங்கள் உரையாடியதாகவும் சமாதானப் பிரேரணைபற்றிய உரையாடல்கள் கொழும்பிலும் நிராகரிக்கப்பட்டதாகவும் இது தமக்குக் கவலை ஏற்படுத்தியுள்ளது என்று கனேடிய தூதுக்குழு அறிவித்திருக்கிறது.

சிறிலங்கா அரசின் திடீர்க் கைது, திடீர்த் தடுப்புக் காவல் பற்றி கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், சர்வதேச மனித உரிமை ஸ்தாபனத்தின் விதந்துரைகளை ஏற்று நடப்பதாக சிறிலங்கா அரசு பல வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறது. ஆனால் இன்னமும் சிறிலங்காவில் பொது மக்கள் திடீரென்று கைது செய்யப்படுகிறார்கள். எந்த விதமான விசாரணைகளோ, பதிவுகளோ இல்லாமல் அதிகார பூர்வமற்ற தடுப்புக் காவல் முகாம்களில் இவர்கள் அடைக்கப்படுகிறார்கள். சிலர் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். இன்னும் சிலர் கொல்லப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

திடீரென்று காணாமற் போனதாகச் சொல்லப்படும் பலரைப் பற்றிப் பொது மக்கள் தம்மிடம் வழங்கிய மகஜர்களைத் தாம் அரசஅமைச்சர் ஒருவரிடம் கையளித்துள்ளதாகத் தூதுக் குழுவினர் தெரிவித்தார்கள்.

இந்தக் தூதுக் குழுவின் அறிக்கை கனேடிய அரசாங்கத்திடம்சமர்பிக்கப்படும் என்றும், வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி புதன்கிழமையன்று கனடாவில் பகிரங்கமாக வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பெப்ரவரி 7ஆம் திகதி சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரிஸ்சில் நடைபெற இருக்கின்றது.

சிறிலங்காவுக்குவழங்கப்பட வேண்டிய நிதி உதவி பற்றிக் கனடா உட்பட சிறிலங்காவுக்கு உதவும் நாடுகள் இந்தக் கூட்டத்தில் ஆராயவும் உள்ளன.

இதேவேளை சிறிலங்காவில் பொதுமக்கள் அடிக்கடி காணாமற் போவது பற்றி விசாரணை செய்ய அண்மையில் சிறிலங்காவுக்கு விஜயம் செய்த ஐ.நா. விசாரணைக் குழு, தாங்கள் இதுவரை விசாரித்த குற்றச்சாட்டுகளில், சிறிலங்காவில் பொது மக்கள் திடீரென்று மறைவது தான் மோசமானது என்று அறிவித்துள்ளமை தெரிந்ததே.

கத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. யாழ். மாவட்ட இலங்கை வங்கி அலுவலகத்தின் கீழ் இயங்கிவந்த கிளிநொச்சி இலங்கை வங்கி கிளை வவுனியா மாவட்ட இலங்கை வங்கி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது

இப்பிராந்திய வங்கியின் கீழ் உள்ள கிளை அலுவலகங்கள் மூலம் சகல புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் அதிகளவு நிதி கடனாக வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி நிதியின் ஒரு பகுதி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் செலவிடப்பட்டிருப்பதாக அவ்வப்பகுதிகளில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. [க]

## மீனவர் மீது

இராணுவத்தினர் பூவரசங்குளம் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் மீனவர்கள் தமது தொழிலையும் கைவிட்டு திரும்பிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று அதிகாலை ஒரு மணியளவில் அரியாலை கிழக்கு நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் பரா வெளிச்சம் செலுத்தி 50 கலிபர் தாக்குதல் நடாத்தியுள்ளனர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது'